## சிறப்புக் குறிப்பு 22

## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2007[1]



### உண்மைத்துறை

04 சனவரி 2007 - அரச அலுவலர்களுக்கும், மாகாண சபை ஊழியர்களுக்குமான உதவு தொகை ஓய்வூதியத் திட்டம் நீக்கப்பட்டு அவர்களுக்கு விதவைகள் / விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான உறுப்புரிமை வழங்கப்பட்டது.

24 ஏப்பிறல் 2007 - இரண்டாவது தேசிய வான் சேவையான மிகின்லங்கா (பிரைவேட்)லிமிடெட், தனது தொழிற்பாடுகளை முழுவதும் அரச உடைமையான தொழில் முயற்சியாக ஆரம்பித்தது.

27 ஏப்பிறல் 2007 - அஞ்சல் கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

01 யூலை 2007 - பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் 17.5 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

01 நவெம்பர் 2007 - மாதாந்த வாடகை உள்ளடங்கலான சிறிலங்கா ரெலிகொம்மின் உள்நாட்டுத் தீர்வை திருத்தியமைக்கப்பட்டது.

01 பெப்புருவரி 2008 - பயணிகள் பேருந்துக்கட்டணங்கள் 4.6 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

மார்ச்சு 2008 - மின்சாரத் தீர்வை 30 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

### வெளிநாட்டுத்துறை

**வர்த்தகமும் தீர்வையும்**

31 சனவரி 2007 - தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களான கருவாடு, மாசிக்கருவாடு, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், சிறுதானியம், பாசிப்பயறு தட்டைப்பயறு மற்றும் மிளகாய் என்பனவற்றின் இறக்குமதிமீது பிரயோகிக்கத்தக்க முழுமையான தீர்வைத் தளர்த்தல் 2007 பெப்புருவரி 15 வரைக்கும் நீடிக்கப்பட்டது.

02 பெப்புருவரி 2007 - பெற்றோல் இறக்குமதி மீதான இறக்குமதித் தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.5.00இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூ.20.00 ஆக அதிகரிக்கப்பட்டது.

14 பெப்புருவரி 2007 - பெற்றோல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ.15.00 தீர்வைத் தளர்த்தல் ஒரு மாத காலத்திற்கு வழங்கப்பட்டது.

10 மார்ச்சு 2007 - தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களான மீன்வகை, மாசிக்கருவாடு, நெத்தலிமீன், சிறுதானியம், பாசிப்பயறு, மிளகாய், தயாரிக்கப்பட்ட அல்லது பதனிடப்பட்ட மீன் என்பனவற்றின் இறக்குமதி மீது பிரயோகிக்கப்பட்ட முழுமையான தீர்வைத் தளர்த்தல் மற்றும் பெரிய வெங்காயத்துக்கு கி.கிறாமிற்கு வழங்கப்பட்ட ரூ.10.00 தீர்வைத் தளர்த்தல் என்பன 2007 ஏப்பிறல் 30 வரைக்கும் நீடிக்கப்பட்டது.

29 மார்ச்சு 2007 - உருளைக்கிழங்கின் இறக்குமதி மீது கிலோ கிறாமொன்றிற்கு வழங்கப்பட்ட ரூ.5.00 தீர்வைத் தளர்த்தல் 2007 ஏப்பிறல் 30 வரைக்கும் வழங்கப்பட்டது.

17 ஏப்பிறல் 2007 - பெற்றோல் இறக்குமதிக்கான தீர்வைத் தளர்த்தல்லீற்றர் ஒன்றிற்கு ரூ.15.00 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூ.20.00இற்கு அதிகரிக்கப்பட்டது. (முழுமையான தீர்வைத் தளர்த்தல்)

25 ஏப்பிறல் 2007 - நிதி திட்டமிடல் அமைச்சால் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அரச அலுவலர்களுக்கு சலுகை தீர்வை வீதங்களில் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

01 யூன் 2007 - தெரிவு செய்யப்பட்ட உணவுப்பொருட்களான மீன்வகை, மாசிக்கருவாடு, நெத்தலிமீன், சிறுதானியங்கள், பாசிப்பயறு மற்றும் மிளகாய் என்பனவற்றின் இறக்குமதிமீது பிரயோகிக்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல் 2007 யூன் 30 வரைக்கும் நீடிக்கப்பட்டது.

- உருளைக்கிழங்கு மீதான ரூ.5.00, பெரிய வெங்காயத்தின் மீதான ரூ.10.00, கருப்பஞ்சீனி, பீற் சீனி, ஏனைய சீனி வகை மற்றும் சர்க்கரை என்பவற்றின் மீதான ரூ.2.00, வெள்ளைப்படிக கரும்புச்சீனி மற்றும் வெள்ளைப்படிகபீற் சீனி, மீதான ரூ.3.00 கொண்ட தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டன.

01 ஓகத்து 2007 - தெரிவு செய்யப்பட்ட உடன்மீன் வகைகளின் இறக்குமதிக்கான முழுமையான தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.

- உலர்த்திய தேங்காய் மீதான இறக்குமதித் தீர்வை 29 பெப்புருவரி 2008 வரை நீக்கப்பட்டது.
- உணவுக்குரிய எண்ணெய் வகை இறக்குமதி மீது ஒரு மாத காலப்பகுதிக்கு 10 சதவீதமான தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.
- பீற் சீனி மற்றும் வெல்லம் இறக்குமதி மீது கிலோ கிறாமொன்றிற்கு ரூ.1.50 தீர்வைத் தளத்தல் வழங்கப்பட்டது.
- தெரிவு செய்யப்பட்ட பத்து உணவுப் பொருட்களுக்கு இறக்குமதி மீதான மேலதிகக் கட்டணம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, சமூக பொறுப்பாண்மை வரி, தீர்வை மற்றும் சுங்கத்தினால் பிரயோகிக்கப்படும் ஏனைய கட்டணங்களுக்கு பதிலாக தனியொரு குறித்துரைக்கப்பட்ட சுங்கத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.

[1] இது 2007ஆம் ஆண்டு மற்றும் 2008ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குகின்றது. அறிவிக்கப்பட்டு 2008இல் நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 15 ஓகத்து 2007 | - | பெரிய வெங்காய இறக்குமதி மீது கிலோ கிறாமொன்றிற்கு ரூ.5.00 கொண்ட தீர்வைத் தளர்த்தல் 2007 திசெம்பர் 31ஆம் திகதி வரைக்கும் வழங்கப்பட்டது. |
| 20 ஓகத்து 2007 | - | உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான கிலோ கிறாமொன்றிற்கு ரூ.5.00 கொண்ட தீர்வைத் தளர்த்தல் 2007 ஒத்தோபர் 31 வரை வழங்கப்பட்டது. |
| 13 செத்தெம்பர் 2007 | - | சிறி லங்கா ரெலிகொம்மினால் இறக்குமதி / கொள்வனவு (உள்ளூரில்) செய்யப்படும் செயற்றிட்டம் தொடர்பிலான பொருட்களுக்கு சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| 15 ஒத்தோபர் 2007 | - | முழுமையாக அரிசியாக்கப்பட்ட அல்லது ஓரளவு அரிசியாக்கப்பட்ட மற்றும் உடைத்த அரிசி இறக்குமதிக்கு முழுமையான தீர்வைத் தளர்த்தல் 31திசெம்பர் 2007 வரை வழங்கப்பட்டது. |
| 08 நவெம்பர் 2007 | - | இலத்திரனியல் இழை அல்லது ஒளி உமிழ் விளக்குகள் மற்றும் வட்ட விளக்குக் கார்பன்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்களிக்கப்பட்டது. |
| | - | இலங்கைக் கொடியின் கீழான கப்பல் பதிவு, சுங்கத் தீர்வை மற்றும் துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| திசெம்பர் 2007 | - | சமையல் எண்ணெய் தவிர்ந்த அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன. |
| 09 சனவரி 2008 | - | அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியின்போது சுங்கத்தில் விதிக்கப்படும் சுங்கத் தீர்வை, பெறுமதி சேர்வரி, துறைமுக வானூர்தி நிலையத் தீர்வை மற்றும் ஏனைய கட்டணங்களுக்குப் பதிலாக 09.01.2008 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 4 மாதங்களுக்கான சிறப்புப் பண்டத் தீர்வை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 01 சனவரி 2007 | - | நாணய மாற்றுதலுக்கான அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தலுக்காக ஆண்டொன்றிற்கு தேவைப்படும் ஆகக் குறைந்த புரள்வு ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 120,000இலிருந்து ஐ.அ.டொலர் 600,000இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | நாணயமாற்றுநர்களுக்கு பயணிகள் காசோலைகளை மாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. |
| 08 சனவரி 2007 | - | முன்னாள் இலங்கையர் / வெளிநாடுகளில் வதியும் இலங்கையர் ஆகியோர் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளில் இரட்டைப் பிரசா உரிமைத் தகுதியினைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்கொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 22 சனவரி 2007 | - | வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் முதலிடப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளின் முதலீடுமீது பிரயோகிக்கப்படும் ஆகக் குறைந்த வைத்திருக்கக்கூடிய காலப்பகுதி விளக்கிக் கொள்ளப்பட்டது. |
| 19 மார்ச்சு 2007 | - | வதியும் விருந்தினர் திட்டத்தின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொண்ட வெளிநாட்டவர்களுக்கான இரண்டு வெளிநாட்டு நாணயக் கணக்கு திட்டங்களான வதியும் விருந்தினர் நாணயக் கணக்கு மற்றும் வதியும் விருந்தினர் ரூபாய் நடைமுறைக் கணக்கு என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. |
| 14 யூன் 2007 | - | வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் இலங்கையர்களுக்கான பயணப்படியின் ஒரு பகுதியாக வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவது ஐ.அ.டொலர் 500 இலிருந்து ஐ.அ.டொலர் 1,000 அல்லது அதற்குச்சமமான ஏனைய மாற்றுதலுக்குரிய நாணயத்திற்குச் சமமாக அதிகரிக்கப்பட்டுள்ளமையானது நடைமுறையிலுள்ள பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களை மேலும் தாராளமயப்படுத்துவதுடன் வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் இலங்கையர்களுக்கு நன்மையளிப்பதாகவும் இருக்கும். |
| 15 யூன் 2007 | - | வணிகர்களும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து அவற்றினை பேணுவதன் மூலம் அத்தகைய கணக்குகளை வைத்திருக்கும் உறுப்பினரொருவர் தமது உடனடி குடும்ப உறுப்பினரால் வெளிநாட்டு நாணயங்களை வைப்புச் செய்வதனை ஏற்றுக் கொள்வதற்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய குடும்ப உறுப்பினர் ஒருவரிடமிருந்து சேகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களை ஒரு கணக்கு வைத்திருப்பவர் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தும்போது இது ஐ.அ.டொலர் 1,000 அல்லது அதற்குச் சமமாக ஏனைய மாற்றுதலுக்குரிய வெளிநாட்டு நாணயங்களை விஞ்சியதாக இருத்தலாகாது. |
| 05 யூலை 2007 | - | அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் வருடாந்த வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடனான வைப்புத்தொகை) ஐ.அ.டொலர்கள் 4 மில்லியன் அல்லது அதற்குச் சமமான ஏனைய அனுமதியளிக்கப்பட்ட நாணயங்களின் பெறுமதியினைவிட அதிகமாக காணப்படின், கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 1000 வரையளவில் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், இந்த தொடக்க நிலையிலுள்ள ஐ.அ.டொலர் 4 மில்லியன் தொகையானது ஆண்டு முழுவதும் பேணப்படாவிடில் அந்த நாணய மாற்றுநருக்கு வெளிநாட்டுச் செலாவணியை விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் புறக்கீடு செய்யப்படும். |
| 27 செத்தெம்பர் 2007 | - | ஒரு நபரினால் நாட்டிற்குள் கொண்டுவரப்படும் நாணயங்களுக்கு இலங்கைச் சுங்கத்தினால் பிரகடனப்பட்டிருந்த எல்லை ஐ.அ.டொலர்கள் 10,000இலிருந்து ஐ.அ.டொலர்கள் 15,000 அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |

06 திசெம்பர் 2007 - இலங்கைப் பிணைகள் பாவர்த்தனை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு நிதிகள், பிராந்திய நிதிகள் மற்றும் சமவாய நிதிகள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், மற்றும் வெளி நாட:டுப் பிரசைகள் என்போர் குறிக்கப்பட்ட எந்தவொரு நேரத்திலும் வெளிநின்ற திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதம் வரையிலான ரூபா பெறுமதியிலான திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கும் வைத்திருப்பதற்கும் அனுமதியளிக்கப்பட்டனர்.

## அடுத்து வருபவை

2008
- இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான புதிய வெளிநாட்டு நாணயக் கணக்கை அறிமுகப்படுத்தல்
- மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களை மேலும் தாராளப்படுத்துவதற்காக, தேவையான வழிமுறைகளை ஒருங்கிணைத்து ஏற்கனவேயிருக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீளாய்வு செய்தல்.
- வரவு செலவுத் திட்டம் 2008இல் முன்மொழியப்பட்டவாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தனியார்துறையில் அனுமதி வழங்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட வணிகர்களுக்கு உலக மூலதனச் சந்தைகளிலிருந்து கடன் பெறுவதற்கான தொழிற்பாட்டு வழிகாட்டல்களை வழங்கல்

## இறைத்துறை

### அரசின் அரசிறை

01 சனவரி 2007
- ரூ.1.8 மில்லியன் பெறுமதிசேர் வரியின் கீழ்மட்ட எல்லையில் உள்ள ஆனால் பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்யாத ஒவ்வொரு நபரும், தன்னிச்சையான பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்து 5 சதவீத மீளப் பெறப்பட முடியாத பெறுமதி சேர் வரியைச் செலுத்துவதற்கான தெரிவுரிமை வழங்கப்பட்டது.
- பின்வருவன பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன
  - உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைத்தறி ஆடைகளின் வழங்கல்
  - இலங்கை மின்சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட பொறியும் கருவிகளும்
  - செல்லுபடியான வழித்தடங்களுக்கான உரிமைப்பத்திரத்தை வைத்திருக்கும் எந்தவொரு பேருந்து உரிமையாளரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பேருந்தினதும் இறக்குமதி
  - தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கான பொறிகளின் இறக்குமதி (தேயிலைக் கைத்தொழில்களுக்கான பொறித் தொகுதி உணவு அல்லது பானம் தயாரிப்பதற்கான பொறி மற்றும் தேங்காய் சிரட்டை உடைப்பதற்கான பொறிகள்)
  - உலை எண்ணெய்
  - இனப்பெருக்கம் செய்யும் விலங்குகளும், பொருட்களும்
  - மின் உருவாக்குதலும், பகிர்ந்தளித்தலும்
  - கப்பல்களை வாடகைக்குப் பெறல்
  - ஏதாவது திரைப்படத்தை தயாரித்தல், விநியோகித்தல், மற்றும் திரையிடல், திரைப்படத் தயாரிப்புகளுக்கான ஆய்வுகூட வசதிகளின் வழங்கல்
- பின்வரும் பொருட்களின் பெறுமதிசேர் வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது
  - உயர் தொழில்நுட்ப மருத்துவக் கருவிகள்
  - அனுமதிச் சீட்டு வழங்கும் பொறிகளைத் தயாரிக்கும் பொறிகள்
  - தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஒப்புதலுடன் திரைப்படக் கைத்தொழிலுக்கென தெரிவு செய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்தல்
  - ஆபரணங்கள்
- அலகுப் பொறுப்பு நிதியங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் என்பன முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன
- வட, கிழக்கு மாகாணங்களில் பிரயோகிக்கப்படும் வியாபார மொத்த வரி வீதமானது குடிவகை மற்றும் சிகரட்டுக்களுக்கு அதிகரிக்கப்பட்டன.

02 சனவரி 2007 - சமூர்த்தி அதிகாரசபை, ஒரு மாவட்ட செயலகம் அல்லது ஒரு பிரதேச செயலகம் என்பனவற்றினால் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் பேணப்படுகின்ற கணக்குகள் பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

13 மார்சு 2007 - குடிவகை மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

01 ஏப்பிறல் 2007
- பொருளியல் பணிக் கட்டணங்களில் கணிப்பீடு தொடர்பான கீழ்மட்ட புரள்வு ரூ.10 மில்லியனிலிருந்து ரூ.7.5 மில்லியனுக்குக் குறைக்கப்பட்டது.
- சிலவகை வர்த்தகம், வணிகம் தொடர்பிலான புரள்வு மீது பொருளியல் பணிக் கட்டணங்களின் விதிக்கத் தேவையற்ற தன்மையானது, அத்தகைய வர்த்தகம், வணிகம் தொடங்கி 3 ஆண்டு காலப்பகுதியில் தயாரிப்புக் கைத்தொழில்கள் தொடர்பில் மட்டுமே பிரயோகிக்கப்படும்.

- துறைமுகத்திலிருந்தான வர்த்தகப் புரள்விலிருந்து கரை கடந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு மீளத் திறக்கப்படும் மூடப்பட்ட தொழிற்சாலைகளுக்கு (மீளத் திறக்கப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்த) பொருளியல் பணிக் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும்.
- அலகுப் பொறுப்பு நிதியங்கள் 0.5 சதவீதமான வீதத்தில் பொருளியல் பணிக்கட்டணங்களை செலுத்த வேண்டும்.
- தொழில் முடிவுக்காலத்தில் கிடைக்கும் நன்மைகளுக்கான வரி பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன.
  - உதவுதொகைக் காலம் 20 ஆண்டுகள் அல்லது அதற்குக் கூடுதலாக இருப்பின் பின்வரும் வீதங்கள் பயன்படுத்தப்படும்.
    - முதல் ரூ.5,000,000 இல்லை
    - அடுத்த ரூ.1,000,000 . 5%
    - மிகுதி 10%
  - உதவுதொகைக் காலம் 20 ஆண்டுகளுக்கு குறைவாக இருப்பின் பின்வரும் வீதங்கள் பயன்படுத்தப்படும்.
    - முதல் ரூ.2,000,000 இல்லை
    - அடுத்த ரூ.1,000,000 5%
    - மிகுதி 10%
- நிருமாணக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் பொறிகளுக்கான பெறுமானத்தேய்வு 12.5 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.
- வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களிலிருந்து வட்டியுழைக்கும் தனிநபர்கள் மீதான பிடித்துவைத்தல் வரி மீது கீழ்வரும் விதிகள் பிரயோகிக்கப்பட்டன. வைப்பாளர் எந்தவொரு மதிப்பீட்டாண்டிற்குமான தனது மொத்த வருமானம் பின்வருமாறு இருக்குமென வெளிப்படுத்துவராயின்;
  - ரூ.300,000ஐ விட குறைவெனின், வரி கழிக்கப்படமாட்டாது
  - ரூ.300,000 இலும் அதிகம் ஆனால் ரூ.600,000விடக் குறைவெனின் 2 1/2 சதவீத வரி கழிக்கப்படும்
  - ரூ.600,000 இலும் அதிகமெனின், 10 சதவீதம் கழிக்கப்படும்
- ஆலோசனைக் கட்டணங்கள் மீதான பிடித்து வைத்திருக்கும் வரி 5 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- இலங்கைக்கு வெளியே நிருமாண வேலைகளில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தனியாளின் இலாபங்கள், வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டு இலங்கைக்கு ஒரு வங்கியூடாக பணவனுப்பல் செய்யப்பட்டால் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.
- இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கட்டட நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதியத் தீர்வையினை நிருவகிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்.
- கப்பல்கள் மீதான மூலதனப்படி 33 1/3 சதவீதத்தற்கு உயர்த்தப்பட்டது

ஏப்பிறல் 2007 - திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கானது பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

14 மே 2007 - சிலவகை இறக்குமதிப் பொருட்களுக்கு துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தி வரி விலக்களிப்புகளும், சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

01 யூன் 2007 - சிகரட்டுக்களின் நீளத்தின் அடிப்படையில் சிகரட் மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

06 யூன் 2007 - தெரிவு செய்யப்பட்ட உடன் மீன், சிறு தானியம் மற்றும் பாசிப்பயறு என்பவற்றின் இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

01 யூலை 2007 - முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்துள்ள மருத்துவ நிறுவனத்தினால் வழங்கப்படும் நலக் கவனிப்பு பணிகள் மற்றும் களிமண் ஓடுகள், பதனிடப்படாத காய்கறி வகை, பழங்கள் மற்றும் மீன் உற்பத்திகள் போன்ற உற்பத்திப் பொருட்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டு அல்லது உற்பத்தி செய்யப்பட்டிருந்தால் அவற்றிற்கு பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

- இணங்குவிப்பு குறியீட்டு எண் 1401-20 இன் கீழ் வகுக்கப்பட்ட பிரம்புக் கழிவுகளின் இறக்குமதி அல்லது அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட பிரம்புக் கழிவுகளின் விநியோகம் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்குப் பெற்றுள்ளது.

17 யூலை 2007 - உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட இரசாயன நப்தா, பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- இணங்குவிப்பு முறைக் குறியீட்டு எண் 8411.91 மற்றும் 8803.30இன் கீழ் வகுக்கப்பட்ட வானூர்தி இயந்திரங்கள் அல்லது வானூர்தி உதிரிப்பாகங்களின் இறக்குமதிகள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

24 செத்தெம்பர் 2007 - செல்லிடத் தொலைபேசிகள் மீதான வாடிக்கையாளர் வரி 2.5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது

15 ஒத்தோபர் 2007 - வாகனத்தின் உருளைக் கொள்ளளவு அடிப்படையிலான வேறுபட்ட வீதங்களை நடைமுறைக்கிடுவதற்காக பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வரி மீளத் திருத்தியமைக்கப்பட்டது.

25 ஒத்தோபர் 2007 - குடிவகை மீதான கலால் தீர்வை மேல் நோக்கித் திருத்தப்பட்டது.

07 நவெம்பர் 2007 - அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

26 நவெம்பர் 2007 - தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரி திருத்தப்பட்டதுடன் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்கள் மீது வரி விதிக்கப்பட்டது.

01 சனவரி 2008

- பெற்றோல் மீதான பெறுமதிசேர்வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.
- கைத்தொலைபேசிகள் மீதான 10 சதவீத வாடிக்கையாளர் வரி கம்பியில்லாத் தொலைபேசிக்கும் விரிவாக்கப்பட்டது.
- கீழ்வருவன பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
  - நிதியியல் பணிகளிலுள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
  - 1972ஆம் ஆண்டு 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகள்
  - "நிகனகிரா உதானயா" என அழைக்கப்படும் கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வரி விடுமுறைக்குத் தகுதியான, வணிக நோக்கத்திற்காக நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள்.
  - அடையாளங் காணப்பட்ட குறிப்பிட்ட சில அரச செயற்றிட்டங்கள்
  - இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பாலிலிருந்து தயாரிக்கப்படும் பால் உற்பத்திப் பொருட்கள்
  - இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் அரிசி உற்பத்திகள்
  - உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி
  - ஆடைக் கைத்தொழிலுக்காக இறக்குமதி செய்யப்படும் நூலிழை
- இலத்திரனியல் இழைகள் அல்லது ஒளி உமிழ் விளக்குகள் மற்றும் வட்ட விளக்கு கார்பன் என்பவற்றின் இறக்குமதி மீதான பெறுமதி சேர்வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.
- எந்தவொரு வணிகத்தினதும் புரள்வுகள் ஏற்றுமதி அல்லது அந்நிய செலாவணியிலான வருமானங்களைக் கொண்டிருக்குமாயின் பொருளியல் பணிக் கட்டணங்கள் 2.5 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்படும்.
- குடிவகைகள் மற்றும் உந்து ஊர்திகளின் விற்பனைப் புரள்வின் மீதான பொருளியல் பணிக்கட்டணங்கள் 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.
- சமூகப் பொறுப்புவரி 1 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.
- பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வரி 2.5 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.
- 2008 சனவரி 1ஆம் நாளிற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவெனுவன் அபி (நமக்காக நாம்) நிதியத்திற்கான நன்கொடையானது தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளின் கீழ் முழுமையாகக் கழிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது.
- இரத்தினக்கல் ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட இரத்தினக்கற்களின் பெறுமதியில் 2.5 சதவீதம் வருமான வரியாக அறவிடப்படும்.

**அடுத்து வருபவை**

01 ஏப்பிறல் 2008

- கூட்டுறவுச் சங்கத்தின் எந்தவொரு இலாபம் அல்லது வருமானமும் வருமான வரியிலிருந்து 5 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்படும்.
- வங்கி அல்லது நிதியியல் நிறவனங்களில் கூட்டுறவுச் சங்கங்களால் (கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் உள்ளடங்கலாக)மேற் கொள்ளப்பட்ட எந்தவொரு வைப்பின் மீதான வட்டி வருமானங்கள் 10 சதவீத பிடித்து வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- 1972ஆம் ஆண்டு 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது கிராமிய வங்கியால் பேணப்படும் எந்தவொரு நடைமுறைக் கணக்கு அல்லது சேமிப்புக் கணக்குகளுக்கும் பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.
- கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் புதிய முதலீடுகள், ரூ.50 மில்லியனுக்கு மேலும் 50 நபர்களுக்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களையும் வழங்கும் பட்சத்தில் வருமானவரியிலிருந்து 5 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்படும்.
- அபி வெனுவன் அபி (நமக்காக நாம்) நிதியத்தின் வங்கி வைப்புக்கள் மீதான வட்டி உழைப்புக்கள் உள்ளடங்கலாக எந்தவொரு இலாபம் மற்றும் வருமானமும், வருமானவரியிருந்தும் எந்தவொரு வைப்புக்களிலிருந்தான வட்டி மீதான பிடித்துவைத்தல் வரி மற்றும் வரவு வரியிலிருந்தும் விலக்களிக்கப்படுகின்றது.
- மூலவடிவில் இறக்குமதி செய்யப்பட்டு, வெட்டி மினுக்கியதன் பின்னர் ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக்கற்களின் மூலம் கிடைக்கும் இலாபம் மற்றும் வருமானம் என்பன வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.
- குடிவகைகள் மற்றும் உந்து ஊர்திகளின் விற்பனை மீது விதிக்கப்படும் பொருளியல் பணிக்கட்டண வீதம் 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்கு அதிகரிக்கப்படுகின்றது.

  வரிவிடுமுறையில் கீழ்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்
  - உள்நாட்டு இறைச்சட்டம் அல்லது முதலீட்டுச் சபைச்சட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட வரிவிடுமுறைகள், வழங்கப்பட்ட ஒவ்வொரு விடுமுறையும் காலாவதியான பின்னர் மேலும் நீடிக்கப்படமாட்டாது.
  - உள்நாட்டு இறைச் சட்டம் அல்லது முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் 01 ஏப்பிறல் 2008இற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வரி விடுமுறைகள் ஆகக் கூடியது மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருக்காது என்பதுடன் அத்தகைய வரி விடுமுறை காலாவதியானதன் பின்னர் ஏற்படும் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் அடுத்துவரும் ஆண்டுகளில் கீழ்வருமாறு வரியிடப்படும்

| | | |
|---|---|---|
| 25 யூலை 2007 | - | பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் மீதான கலந்துரையாடல் பத்திரம் 32உம் 39 உம் வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. |
| 01 ஓகத்து 2007 | - | பிரமுக சேமிப்புக்கள் மற்றும் அபிவிருத்தி வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி என்றழைக்கப்படும் புதிய அரச வங்கிக்கு கையளிக்கப்பட்டுள்ளன. |
| 23 ஓகத்து 2007 | - | ஒரு கலண்டர் மாதத்தில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான தடவைகளுடன் முதனிலை வணிகர்கள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.<br>மத்திய வங்கியானது, வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுக்கு வங்கி கொள்கை வீதத்தில், நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்தத் தொகையை அறிவிப்பதற்கும் விகிதாசார ரீதியில் தொகையை ஒதுக்குவதற்கும் தீர்மானித்தது. |
| 01 நவெம்பர் 2007 | - | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் அல்லது குழுவான வாடிக்கையாளர்களுக்கு கடனாக வழங்கப்படக்கூடிய உச்ச தொகை மீதான பாதுகாப்புத் தேவைப்பாடுகள் திருத்தியமைக்கப்பட்டன. |
| 14 நவெம்பர் 2007 | - | பங்கு பற்றும் நிறுவனங்களின் பணி விதிமுறைகள் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கான நியம நேரம் அத்துடன் காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் தீர்த்தல் முறைமையின் கீழ் வாடிக்கையாளர் கணக்குகளுக்கு காசோலை நடைமுறைகளை செலவு வைத்தல் போன்றவற்றின் மீதான பொதுப் பணிப்புரைகளை மத்திய வங்கி வெளியிட்டது. |
| 21 நவெம்பர் 2007 | - | 03 டிசம்பர் 2007 இலிருந்து செயற்படத்தக்க வகையில் ஒரு குறிப்பிட்ட வங்கிக்கான நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியின் கிடைப்பனவு, மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தில், ஒரு கலண்டர் மாதத்தில் நான்கு தடவைகள் வரை மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டதுடன், குறிப்பிட்ட பங்குபற்றுனர் ஒருவரால் ஒரு கலண்டர் மாதத்தில் 4 தடவைக்கு மேலான எந்தவொரு பெறுவனவும் வருடத்திற்கான 19 சதவீத தண்ட வீதத்திற்குட்படும். |
| 26 திசெம்பர் 2007 | - | மூலதனத் தேவைப்பாடுகளைக் கணிப்பிடுவது தொடர்பில் கடன் இடர்நேர்வுக்கான தரப்படுத்தப்பட்ட அணுகுமுறை, சந்தை இடர்நேர்வுக்கான தரப்படுத்தப்பட்ட அளவீட்டு முறை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுக்கான அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறை என்பன 1 சனவரி 2008 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் வங்கிகள் பிரயோகிப்பதை தேவைப்படுத்தி பாசல் II இன் கீழான மூலதனப் போதுமை விகிதத்தின் மீதான பணிப்பரைகள் வழங்கப்பட்டன. |
| | - | பணிப்பாளர்கள் சபையினை வங்கித் தொழிலுக்கான பொறுப்பு மற்றும் பதில் கூறும் தன்மையுடையதாக்கல் மற்றும் வங்கிகளுக்கான ஆரோக்கியமானதும், வலுவானதுமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை முன்னேற்றும் நோக்குடன் 1 சனவரி 2008 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் உரிமையளிப்பதற்கான கூட்டிணை ஆளுகை மீதான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 31 திசெம்பர் 2007 | - | வெளிநாட்டு வங்கிகளின் வங்கித் தொழிற்பாடுகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கம், புதிய நிதியியல் உற்பத்திகளின் அறிமுகப்படுத்தலின் தேவை மற்றும் உயர்தரமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளின் நிபுணத்துவத்தின் தேவை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு வங்கித்துறையில் வெளிநாட்டவர்களின் பணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலான புதிய கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 02 சனவரி 2008 | - | வழிகாட்டல் 2008 மற்றும் அதற்கப்பாலான நாணய மற்றும் நிதியியல்துறை கொள்கைகள மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்டது. |
| 10 மார்ச்சு 2008 | - | இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட் தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. |

**அடுத்து வருபவை**

- வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை முன்னேற்றுவதற்காக, வங்கிகளுக்கான ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான வழிகாட்டல்களை வழங்குதல்
- வேளாண்மைத்துறைக்கு உரிமைக் கட்டளை வழங்குவது தொடர்பான பணிப்புரைகளை வழங்குதல்
- யூன் 2008 இலிருந்து நடைமுறைக்கு வரும் இணையான அறிக்கையிடுதலுடன் ஐஏஎஸ் 32 மற்றும் ஐஏஎஸ் 39 என்பனவற்றைப் பின்பற்றுவதற்கான ஒழுங்குகள்.
- வெளிமூல நடவடிக்கைகளை முகாமை செய்வது மீதான மதிநுட்ப நெறிமுறைகளை வழங்குதல்